1686

16 SEP 1929

786

யாக்கரீம்.

அத்தப்சீரி விமஆனி வத்தஷ்பீகி
வத்தஹ்றமீதி வத்தக்பீர் என்ற

தற்பரனின் சுத்ததத்துவப் புகழ்ச்சி.

திரவிய சகாயர்
பழனித்தாலூக்கா கீரனூர் ஆலி ஜனுப்
பி. என். அசேன் முகம்மது சாகிபு
அவர்கள்

ஆசிரியன்
பழனித்தாலூக்கா கீரனூர் அருட்கவி
மகம்மது இஸ்மாயில்

...ப்பாளையம்
...வல் பிரசில்
...பெற்றது.
...-1929

Q7
N29
176810.

யாக்கரீம்.

அத்தப்சீரி லிமஆனி வத்தஸ்பீகி
வத்தஹ்மீதி வத்தக்பீர் என்ற

தற்பரனின் சுத்ததத்துவப் புகழ்ச்சி.

திரவிய சகாயர்
பழனித்தாலூக்கா கீரனூர் ஆலிஜனாப்
பி.என். அசேன்முகம்மதுசாகிபு அவர்கள்

ஆசிரியன்
பழனித்தாலூக்கா கீரனூர் அருட்கவி
முகம்மது இஸ்மாயில்

மேட்டுப்பாளையம்
இம்மானுவேல் பிரசில்
பதிப்பிக்கப்பெற்றது.

11—8—1929

முகவுரை.

மூமீன் முஸ்லீங்களான சகோதர சகோதரிகளே!

எல்லாம் வல்ல அல்லாசுபஹானா ஹுவத்த ஆலாவின் திரு நாமோதயங்களை அளவிட்டு எடுத்துரைப்பதென்றால், அது அசாத்தியமென எம்மதத்தினரும் தர்க்கமின்றி ஒப்புக்கொள்ளத்தக்கதாகும்.

எனினும் (தன்ஸிஹ்). (தஸ்பீஹ்) பரிசுத்தம் என ஒருவகை 33 பிரிவுகளாகவும், (ஜமாலி) (தஹ்மீத்) புகழ்ச்சி அழகான நற்குணம் என ஒருவகை 33 பிரிவுகளாகளாகவும் (ஜலாலி) (தஹ்பீர்) தத்துவம் எனக் ஒரு வகை 33 பிரிவுகளாகவும் ஆன்றோர்களால் பாகுபாடு செய்யப்பட்டு அல்லாவுக்கு நாமங்கள் 99 எனக் கணித்திருக்கிறார்கள், இதற்கு அநேக சான்றுகள் குர்ஆன் ஹதிதுகளில் ஆதாரத்துடன் மிகமலிந்து காணக்கிடக்கின்றதுடன் அஸ்மாவுல் ஹுஸ்னா என்று இதற்கு அரபியில் நாமமிட்டு முஸ்லீம் பக்தகோடிகள் மனனம்

செய்து ஜெபித்து உலகத்தின் அநேக காரியங்கள் கை கூடி வருகுவதை அநுபவத்தில் கண்கூடாகப் பார்க்கப் பட்டுவருகிறது.

எனவே நாம் படிக்கும் ஐ காலத் தொழுகைக் குப் பின் முறையே 33 தரம் தனித்தனி ஜெபிக்கும் வாக்கியங்களான (சுபஹாநல்லா)வில் (தன்ஸிஹ்) (தஸ்பீஹ்) பரிசுத்தத்தின் பொருளையும் (அல்ஹம்துலில்லா)வில் (ஜமாலி) தஹ்மீத் புகழ்ச்சி அழகான நற்குணத்தின் பொருளையும் (அல்லாஹ் அக்ப)ரில் தத்துவார்த்தத்தின் பொருளையும் மிக விரிவாக இம் மூன்று வாக்கியங்களுக்குள்ளடக்கி, மனிதர்களின் நாவிற்குச் சொல்ல மிக இலகுவாகவும் அந்த இரட்சகனிடத்தில் மெச்சிப் பெருமிதலாபத்தைத் தரக்கூடியதும் மறுமையில் இடைபார்க்கும் தராசில் நன்மை கனத்திருக்கக்கூடியதுமான வாக்கியங்களை நான் உங்களுக்கு போதிக்கட்டுமா என ஸஹாபாக்களுக்கு நாயக மருளிய அந்த இரட்சகனின் இத் திருநாமம் மூன்றும் நமது இஸ்லாமியரின் பரம பக்தகோடிகளிடத்து எங்கினும் வியாபித்து நிற்கின்றது.

ஆனால் அரபி பாண்டித்தியம் பெற்ற ஒருசில மேதாவிகளிடத்து மட்டும் இதன் விரிந்த பொருளை நுகர்ந்து அனுபவிக்கும் திறமைகளுண்டேயல்லாது அரபியின் பாண்டித்தியமில்லாத என்போன்றவர்களுக்கு இதன் மகுத்துவத்தை இன்னதென விளங்குந் திறமைகளேதுமில்லை என்பதைத் தெரிந்து தமிழில் விளக்கஞ்செய்தால் இப்பாவியும் ஏனைய பாமர முஸ்லீம்களின் பாவங்களைப் போக்கி இகபரத்தின் நற்பயனளிக்குமென்ற பேராவலால் வேலூர், மௌலானா மௌலவி சுல்த்தானுல் வாஹிலீன் ஆலி ஜனாப் அல் ஹாஜ் முகம்மதுக்கமாலுதீன் சாகிபு கிப்லா அவர்களிடத்திலடுத்து இதன் விரிவுரையை நன்றாக விளங்கி எளிய தமிழில் யாவேரும் தெரிந்து கொள்ளுமாறு தொங்கலிசையில் இது வந்தகாரணம் இதன் விரிவுரைகளையும் செய்யுளாகப் பாடி (அத்தப்ஸீர்), (லிம ஆனி), (வத்தஸ்பீஹி), (வத்தஹ்மீதி), வத்தக்பீரி என்ற தற்பரனின் சுத்ததத்துவப்புகழ்ச்சியென இச்சிறு நூலுக்குப் பெயர்கொடுத்துப் பிரபல வர்த்தகரும் பரோபகாரியும் அரிதான உதாரகுணம் பூண்டோரும் எமது

கோத்திர முறையின் சிறிய தந்தையாரும் பழநித் தா ஹாக்கா கீரனூர் வாசியுமான ஆலி ஜனாப் பி. என். அசேன்முகம்மது சாகிபு அவர்களின் அன்பார்ந்த திர வியசகாயத்தால் அச்சுவாகனம் ஏற்றி வெளிப்படுத்தலா யிற்று.

இன்னோரின் உபகாரமானது சூரியன் சந்திரன் மிளிருநாள்மட்டு நிலைக்கு நிலை இளம்பிறைச்சந்தி ரன்போ லிலகுமென்பதற்கு யாதுதடை. இத்தகைய அரிதான உதார குணத்தை யருளிய எல்லாம் வல்ல அல்ஸுபஹா ஹுவத்த ஆலாவுக்கு முன்னம்புகழ் கூறி நன்றி செலுத்தி இன்னோருக்கு என் மனமார்ந்த நன் றியையும், வந்தனத்தையும் என்றாளும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இச்சிறிய நூலைப் பார்க்கும் முஸ்லீம் சகோதர சகோதரிகள் தப்பிதமிருப்பின் மன்னித்து இப்பாவிக் காக ஈமானுக்கு துஆ செய்குவதோடு குணத்தைக் கையாண்டு அநுஷ்டிப்பீர்களாகில் உங்களின் கோருங் காரியங்கள் உலகில் சித்தியாகுவதை வெகு சீக்கிரத் தில் கண்கூடாகப் பார்க்க எல்லாம் வல்ல அல்லா நல் லருள் புரிகுவானாகவும்.

இங்ஙனம்

அருட்கவி முகம்மது இஸ்மாயில்,

கீரனூர்.

பழநித்தாஹாக்கா.

குறிப்பு:—இப் புத்தகம் வேண்டுவோர் 0—2—6 இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பினால் தபால்செலவின்றி புஸ்தகம் அனுப்பிவைக்கப்படும்.

வேண்டுகோள்.

—o—

நம் மார்க்க அவசிய முக்கிய சிலவற்றை மிக எளிதில் எவர்க்கும் விளங்கும் விதமாய்ப் பதங்களாகவும், செப்புளாகவும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

அபிமானிகள் எவரேனும் ஒருவர் முன் வந்து திரவிய சகாயம் செய்துவார்களாகில் உடனே அச்சியற்றி வெளியிடலாமென ஆதரவு வைக்கிறேன்

இதனால் ஒருவர் சீர்திருந்தினால் உலகமுடிவுநாள் மட்டும் நன்மையின் அபிவிர்த்தி உயர்ந்துகொண்டே போகுமென்று நேயர்களிடம் பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடிமை

அருட்கவி எம். டி. இசுமால்,

கீரனூர்.

பழநித்தாலூக்கா.

பிழை திருத்தம்.

பக்கம்	பாட்டு.	வரி	பிழை.	திருத்தம்.
2	2	8	சிலெயொழி	சில மொழி
9	6	22	எவர்க்கு	ஏவர்க்கு
12	3	12	வன்மையாரண்டு	வன்மையாய்ரண்டு
13	5	11	குவாவி வாழ்க	குலாவி வாழ்க
14	8	29	நிஹமத்தை யும்	நிஹமத்தையும்

கடவுள் வணக்கம்.

காப்புத்துதி நேரிசை வெண்பா.

தன்ஸீ ஹாம் நின்தூய்மை தஹ்மீது நின்புகழ்ச்சி
நின்தத்வம் தக்பீரின் நேர்பொருளை—யுன்னிதமாய்
சொல்களிரி வாகவிசை தொல்லுலகில் நல்லறிஞர்
கல்பிலுறை தற்பரனே காப்பு.

நூன்முகம்.

தோங்கல்.

1 அந்நாள் நபிகளின் நாயகத்து
அருமைப் புதல்வியர் பாத்திமாவும்
எந்த ஒருவரின் உதவியின்றி
இல்லத்தின் பணிகள்யா வுமே
கந்த மாமேனி சோரமிகக்
கஷ்டத் தொடுதாங்க ளேசெய்கின்ற
இந்த சமயத்து வெளியிற்சென்ற
இஷ்ட ரலியாரும் மணைபுக்கினார்

2 புக்கி நோக்கவே மனைவியரின்
பொன்னின் திருமுக மீது தூசி
மிக்கநிரம்பியே களைப்புஞ் சோகம்
மேலிட் டிருப்பதைக் கண்டுமனம்
துக்ககரத்திலாய் நொந்து வாடி
சுக்கூர் செய்தங்கு பாத்திமாவை
பக்கஅழைத்துப சரித்து நன்றாய்ப்
பரிந்து சிலமொழி கூறலுற்றார்

3 வாகுமிஞ்சும் ஓமனைவி பாத்தி
மாவேயுங்களின் தந்தை யர்க்கு
பாகம் பீசபீல் முதலினிலே
பாவை வெள்ளாட்டி வருமல்லவா
ஏகியும் தந்தைக் கெடுத்தோதியே
இங்குவெள்ளாட்டி யழைத்து வந்தால்
சோக மித்தகைக் களைப்புமீறு
சுகமேபெருகுவி ரவரா லென்றார்

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

4 என்ற கனவரின் வார்த்தைதன்னை
ஏற்றுச் சிரமீது மனைவியரும்
நன்று பெருகவே தந்தைநபி
நாயகம் மனைசென்று பார்க்க
அன்று சிலஅசு ஹாபிடத்து
அரிய மறையதின் னுபதேசங்கள்
நன்றாய் விளக்கிகொண் டிருக்கநபி
நங்கையர் பாத்தி மாவுணர்ந்தே

5 மனைக்குள் வந்ததங் கள்மகளை
மகமூ தவர்களுமறிந் திடினும்
தனித்து என்னுடன் வசனிக்கவே
சவுகாச மில்லை யெனவறிந்து
இனித்த மொழியினர் பாத்திமாவும்
ஏகினர் தங்க ளில்லத்திற்கே
புனித ரகமது தோழருக்குப்
புரிந்து பதேசம் முடிந்தபின்னை

6 வந்தமகள் தங்கள் வீடடைய
மர்மந் தெரியவே முகப்பதரும்
சிந்தை யுள்ளெண்ணி மேவிமகள்
திருமுகங் கண்டு வினவுகையில்
முந்தியவி சொன்ன பிசமிலின்
முதலின் வெள்ளாட்டி தேள்வை யொன்று
இந்த நாளிலே யாரகூலே
என்றூர் பாத்திபா தந்தையர்க்கே.

7 உண்டும் வெள்ளாட்டி தருவே ணதா
லோர்சிறிது நன்மை யுலகில்
கண்டு கொள்வீரே யிருலகில்
கணக்கற்ற நன்மை வாரியென்றும்
தெண்டித்தோர்க் கியும் பொருளென்னிடத்
தினிலிருப்ப துமக்கே யெது
வேண்டுமென்பதை மகளே நீரும்
விரித்துரை யென்று ரிசூலுல்லா

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

8 தாழ்ந்த துன்யாவின் வாழ்வைகொஞ்சம்
தந்தை யரேனா னுப்பவில்லை.
நீழ்க வாரியே யிருலகில்
நிகழ்த்து நற்பொரு ளென்னஅது
தேள்வை யெனக்கென்று சொல்லமகள்
செம்மல்நபி முகம்மது நயினர்
வாழ்வு பெறுமூன்று நல்வாக்கியம்
மகளுக் கோதுவார் லகுவாகவே

9 சுபஹா நல்லா அல்ஹம்து லில்லா
துலங்கும் அல்லாஹு அக்பரையும்
ஜெபிக்க வொவ்வொரு தொழுகைப்பின்னும்
சிராசுராவின் படுக்கை முன்னும்
விபரம் முப்பத்தி மூன்றுதரம்
விசைக்கத் தனித்தனி யொவ்வொன்றையும்
சுபசோபனமேவு வாழ்வை நன்றாய்ச்
சுகிக்கலா மென்றாரி ரசூலுல்லா.

10 மாதர் கரசியர் பாத்திமாவும்
மகிழ்ந்து தந்தையார் சொல்படிக்கு
ஓதி ஜெயம்பெற்று ரீருலகில்
உண்மையதின்பொருள் விரிபுரையைப்
போதிப்பான் வேண்டி ராயவேலூர்
புரியார் சுல்தானுல் வாகிலினும்
மாதவராஜி முகம்மதுக்க
மானுதீன் சாகிபுதவியாலே.

ஆக்கியோன்.

11 பொருளை நன்றுக விளங்கியிசை
• புரிந்தேன் மூமின்முஸ் லீங்களுக்கு
அருட்கவி முகம்மதிசுமால்
அன்புமேவிபு மிச் சிறுநூல்
பொருப்பீர் குறைகூறு தெனைமன்னித்து
பொருளையறிந்து கையாண்டு வந்தால்
அருட்பெரும் ஜோதி விரிவாகிடும்
அந்தமிந்து யாவர்க்கு மிதால்.

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

திரவிய சகாயர்.

12 தக்கவர்த்தக மேவு சிந்தை
தாராளம் பரோ பகாரியோன்
மிக்க அரியவு தாரகுணன்
மீளிரு நற்கிர னூர்வாசியான்
அக்கனேவை லுக் கிசைபி என்ன
சேன் முகம்மது மனதயாள
நிக்கதிரவிய வுதவி யிள
நிலவுபோ லென்றும் மீளிருமன்றே.

13 இத்தகைய நற்குணத்தை நெஞ்சி
லீந்த அல்லாவுக்கே முன்நன்றி
நித்தம் பாராட்டி இன்னோருக்கு
நிற்கு என்மன வந்தனத்தை
பத்தமாகவே செலுத்தி நன்றி
பாராட்டவென்றுங் கடமைப் பட்டோம்
சித்தியாக்கு ஈமானி சுலாம்
சின்மய னிவர்க்கும் ஆமீனே.

ஸுபஹாநல்லாவின் விரித்துரை.

தோங்கல்.

1 அல்லா பரிசுத்தன் ஸுபஹாநல்லா
2 ஆரிணை துணை ஸுபஹாநல்லா
2 இல்லை குறை குற்றம் ஸுபஹாநல்லா
4 ஈடேதற் கொவ்வான் சுபஹாநல்லா
5 உல்லாசமானோன் சுபஹாநல்லா
6 ஊனுமில்லாதான் சுபஹாநல்லா
7 எல்லை இல்லாதான் சுபஹாநல்லா
8 ஏதுக்குணமிலான் சுபஹாநல்லா

9 ஒவ்வான் படைப்புக்கு சுபஹாநல்லா
10 ஓங்கான் வஸ்தினுள் சுபஹாநல்லா
11 ஔவுவுமிலான் சுபஹாநல்லா

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

12	ஆகிரு மிலான்	சுபஹானல்லா
13	¶ ஜௌகரு மல்லன்	சுபஹானல்லா
14	தகப்பனுமிலன்	சுபஹானல்லா
15	துவ்வுங் குடிப்பிலன்	சுபஹானல்லா
16	தூக்கம் சிறிதிலன்	சுபஹானல்லா
17	பிறப்படாதவன்	சுபஹானல்லா
18	பெற்போனுமல்லன்	சுபஹானல்லா
19	சிறக்கும் ஆணல்லன்	சுபஹானல்லா
20	ஸ்திரியுமவனலன்	சுபஹானல்லா
21	இறப்போனுமலன்	சுபஹானல்லா
22	எவர்க்கு மகனலன்	சுபஹானல்லா
23	துறக்கு முடலிலன்	சுபஹானல்லா
24	சொருப மற்றவன்	சுபஹானல்லா

¶ இது அதேயப்பொருள்

உ—ம் தண்ணீர், காற்று, சூரியன், சந்திரனைப்போல

25 காலமுமிலன் சுபஹூநல்லா

27 ககனிலுமிலன் சுபஹூநல்லா

27 தாலங்கிழிலன் சுபஹூநல்லா

28 தலங்கள் தெற்கிலன் சுபஹூநல்லா

29 தூலம் வடக்கிலன் சுபஹூநல்லா

30 துலங்குமேற்கிலன் சுபஹூநல்லா

31 ஏலாத்தனமிலன் சுபஹூநல்லா

32 இசைக்குங்கிழக்கிலன் சுபஹூநல்லா

33 ஏற்குமற்றொரு வஸ்துவஸ்த்தில் வர்ண
மிசை ‡ அர்லு அல்லன் சுபஹூநல்லா.

‡ அர்லு ஆதாரப்பொருள்.

உ—ம் கருப்பு, மஞ்சள், சிகப்பு முதல்போன்ற நிறங்களை வேறொருவஸ்துவில் துலக்குவதுபோல.

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

அல்ஹம்துலில்லாஹ்வின் விரித்துரை.

தோங்கல்.

1 அமையும் புகழ்யாவும் அல்லாஹுத்த
லாவுக்காகும் அல்ஹம்துலில்லா

2 சமைத்த கல்குகள் புகழ்வதெல்லாம்
தருமவனுக்கு அல்ஹம்துலில்லா

3 சமர்ந்தாய் அவனை தன்னைப்புகழ்வ
தாகுமவனுக்கு அல்ஹம்துலில்லா

4 சமைத்த மனுக்கள் மனுவைப்புகழ்வ
தாகுமவனுக்கு அல்ஹம்துலில்லா

5 கல்கையவன் புகழ்வது மவனுக்
காகிடுமே அல்ஹம்துலில்லா

6 இல்லாமலிருந்தென்னை வஜூ
தில்கொணர்ந்தான் அல்ஹம்துலில்லா

7 கல்மரங்கர டாக்க மலே
காத்தோனவனே அல்ஹம்துலில்லா

8 வல்லமனுவுடன் பூமினுக்கி
வைத்தோனவனே அல்ஹம்துலில்லா

9 கண்ணிரண்டையும் கொடுத்துநாளுங்
காப்போனவனே அல்ஹம்துலில்லா

10 நுண்ணியசெவி ரண்டுதவி
நோற்போனவனே அல்ஹம்துலில்லா

11 பண்ணிக் கைரண்டை யுபகாரமாய்
பார்ப்போனவனே அல்ஹம்துலில்லா

12 வண்மையாரண்டு காலுதவி
மகிழுமவனே அல்ஹம்துலில்லா

13 நாவுதந்துஸலாமத்தாக்கு
நாயனவனே அல்ஹம்துலில்லா

14 மாவு தாரநற் புத்திதந்து
வளர்ப்போனவனே அல்ஹம்துலில்லா

15 மேவதிரேக நற் சுவாத்தியத்தை
விடுத்தோனவனே அல்ஹம்துலில்லா

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

16 தாவவே வய தநிசமாக்கித்
தருவோனவனே அல்ஹம்துலில்லா
17 ஹலாலான வுணவின் வகையை
யமைத்தோனவனே அல்ஹம்துலில்லா
18 இலாதுஆஜத்து மனிதரிடம்
இட்டோனவனே அல்ஹம்துலில்லா
19 குலாவி வாழ்க விசைந்ததாரம்
கொடுத்தோனவனே அல்ஹம்துலில்லா
20 உலாவிட மணக் கௌலாதையும்
முயர்த்துமவனே அல்ஹம்துலில்லா
21 அடங்கவழிப்பட்டுத் தாய்தந்தைக்கு
ளமைத்தோனவனே அல்ஹம்துலில்லா
22 தடுத்துப் பேசாத பக்ஷிளையும்
தந்தோனவனே அல்ஹம்துலில்லா
23 கொடுத்தான் ஆணை அல்ஹம்துலில்லா
24 விடுத்தான் பெண்ணை அல்ஹம்துலில்லா

25 ஜடமாமதின்வ யததிகமாக்கித்

தருவோனவனே அல்ஹம்துலில்லா

26 கடனில்லாவுண வைக்கொடுத்த

கர்த்தனவனே அல்ஹதுலில்லா

27 அடுத்துத்தொழ வாசையுள்ளத்தினில்

அருள்வோனவனே அல்ஹம்துலில்லா

28 தொடுக்கவே ஜமா அத்திலாசை

துலக்குமவனே அல்ஹமதுலில்லா

29 புடவிமேல்பள்ளி நிஹமத்தையும்

புரிவோனவவனே அல்ஹம்துலில்லா

30 ஆபத்தைவிட்டுமே சலாமத்

தாக்குமவனே அல்ஹம்துலில்லா

31 பாபத்தின்வெறுப்பை நெஞ்சத்துள்

பதித்தோனவனே அல்ஹம்துலில்லா

32 தாபமாகவே நலவினசை

தருவோனவனே அல்ஹம்துலில்லா

33 மாபுடவிமாந்தர்க்குவண்மை
வகுத்தோனவனே அல்ஹம்துலில்லா

அல்லாஹ் அக்பரின் விரித்துரை.

தோங்கல்.

1 அல்லாவே மகாப் பெரியவனென்
றருத்தமாகும் அல்லாஹ் அக்பர்

2 எல்லா ஆலத்தைப் [illegible]
இதமாயாள்[illegible] அல்லாஹ் [illegible]

3 நல்குமிவைகளுக்[illegible]க [illegible]வாரு
ராஜனுனன் அல்லாஹ் அக்பர்

4 எல்லோர் வணக்[illegible]து[illegible] கேபாத்யனு
யிசைந்தோன[illegible] அல்லாஹ் அக்பர்

5 ஆலத்தார் தேட நாடமிக
அருகனவனே அல்லாஹ் அக்பர்
6 ஞாலத்தோர் கோரிக்கை முடிக்கும்
நாயனவனே அல்லாஹ் அக்பர்
7 சாலவே மனிதர்க்கு சுகம்
தருவோனவனே அல்லாஹ் அக்பர்
8 மேலுகடல் திடல் ஜீவவர்க்க
மிரணமீவோன் அல்லாஹ் அக்பர்
9 அரியகஜாணுக்க ளெவ்வளவோ
அவனிடத்து அல்லாஹ் அக்பர்
10 பெரிதாக்கி வானம் தூணில்லாமல்
பிறங்கவைத்தான் அல்லாஹ் அக்பர்
11 உரியவானத்திற் குள்ளே கட
லோங்கச்செய்தான் அல்லாஹ் அக்பர்
12 தரிக்கவேபூமி கடலுக்குமேல்
சமைத்தோனவனே அல்லாஹ் அக்பர்

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

13 மலையை லங்காரமாக்கிப் பூமேல்
வாகுசெய்தோன் அல்லாஹ் அக்பர்

14 நிலக்கப்பூமியின் ஜீவவர்க்க
ரிஜக்குமீவோன் அல்லாஹ் அக்பர்

15 மலக்குஜின்னை மிகுத்த சக்தி
வாய்க்கச்செய்தோன் அல்லாஹ் அக்பர்

16 இலக்கமட்டிடா மக்களை ஆ
தமுக்கீய்ந்தானே அல்லாஹ் அக்பர்

17 ஆதமு மக்கள் கறிவு கல்வி
யதிகமருளினன் அல்லாஹ் அக்பர்

18 மேதினி மனிதர்க்கு மிக
மேன்மையீந்தான் அல்லாஹ் அக்பர்

19 பூதலம்பரவையும் மழித்துப்
புதுக்குமவனே அல்லாஹ் அக்பர்

20 நாதன் அடக்கி வம்பன் ராஜரை
நடத்துமவனே அல்லாஹ் அக்பர்

21 தீர்ப்புநாளன்று யாவரையும்
திரும்ப யெழுப்புவோன் அல்லாஹ் அக்பர்

22 பார்த்துக்கணக்குடன் கேள்விகேட்கும்
பாட்சா அவனே அல்லாஹ் அக்பர்

23 ஏர்க்கசிதேவிகள் சொர்க்கத்திற்
கேகச்சொல்வோன் அல்லாஹ் அக்பர்

24 கார்க்க மூதேவிகள் நரகம்
கற்பிப்போனே அல்லாஹ் அக்பர்

25 நாடுநாட்டத்தின் படிநடத்தும்
நாயனவனே அல்லாஹ் அக்பர்

26 தேடாதபேரைச் சீமானாகச்
செய்வோனவனே அல்லாஹ் அக்பர்

சுத்த தத்துவப் புகழ்ச்சி.

27 நாடியபேரை யேழையாக்கி
நன்மைதருவோன் அல்லாஹ் அக்பர்

28 சூடாராஜாங்கம் பரமயேழை
துலங்கச்செய்வோன் அல்லாஹ் அக்பர்

29 திடலைக்கடலாக்கிக் கடலைத்திடல்
செய்வோனவனே அல்லாஹ் அக்பர்

30 உடலின்மவுத்துஹ யாத்தையுமே
வோங்கச்செய்வோன் அல்லாஹ் அக்பர்

31 கொடுப்பான்பிள்ளை அல்லாஹ் அக்பர்

32 கொடுவான்பிள்ளை அல்லாஹ் அக்பர்

33 அடக்கம் சிறிப்புடன் அழுகையாவு
மமைத்தோனவனே அல்லாஹ் அக்பர்

து ஆ தொங்கல்.

ஓ யென் நாயகா நின்தஸ்பீஹு-
மோங்குதஹ்மீது தக்பீரையும்
நேயமாகவே விளங்கியோதி
நின்கட்டளைக்கு முற்றுந்தலை
சாய்க்குமுஃமின்முஸ் லீங்களுக்கு
தாஈமானிஸ்லாத்தின் பூர்த்தியை
ஆயுள்வரையருள் முகம்மதிஸ-
யா[illegible] ஆ[illegible]னே.